வடக்கு இளையாத்தங்குடி ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை : திருமதி.கி.சத்யா கிருஷ்ணன்

வ.இ.ஊ 02/ 2023-2024

நாள் :07 .03.2024

பொருள் : மனைப்பிரிவு - சிவகங்கை மாவட்டம் - திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியம் - வடக்கு இளையாத்தங்குடி ஊராட்சி - அச்சரம்பட்டி கிராமம் - சர்வே எண் 194/2B-ல் 6240சமீ (1.545ஏக்கர்) பரப்பளவு கொண்ட 32 மனையிடத்திற்கு குடியிருப்பு மனைப்பிரிவு - அனுமதி வழங்குதல் தொடர்பாக.

பார்வை :

1. மனுதாரர் இணையதள விண்ணப்பம், நாள்: 15.12.2023
2. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், சிவகங்கை மாவட்டம் அவர்களின் கடித எண்: ROC/HHCJIJI6/2024/TCP நாள்: 21.02.2024.
3. இணை இயக்குநர், விவசாய துறை, சிவகங்கை மாவட்டம் அவர்களின் கடித எண்: T1/3943/2021 நாள்: 31.10.2023.
4. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம், ந.க.எண்.19799/2020/போ, நாள்:24.12.2020.
5. மனுதாரர் P.வள்ளிக்கண்ணு, அவர்களின் கடிதம். நாள்: 01.03.2024.
6. அரசாணை எண்.138, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள்: 04.06.2004.
7. அரசாணை எண்.79, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள்: 0405.2017
8. அரசாணை எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்: 04.02.2019 மற்றும் அரசாணைஎண்.16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்: 31.01.2020
9. அரசாணை எண்.141, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, UD4(3), நாள்: 23.09.2020.
10. அரசாணை எண்.181, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, UD4(1), நாள்: 09.12.2020.
11. அரசு கடிதம் எண்.19113/நவ4(3)/2017, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள்: 30.08.2017
12. நகர் ஊரமைப்பு ஆணையாளர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.13686/2017/LA1, நாள்: 08.09.2017
13. நகர் ஊரமைப்பு ஆணையாளர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.320/2022/TCP3, நாள்: 07.01.2022
14. மனுதாரர் P.வள்ளிக்கண்ணு, அவர்களின் கட்டண விபரம் கோரப்பட்ட நாள்: 07.02.2024
15. மனுதாரர் P.வள்ளிக்கண்ணு, அவர்களின் கட்டணங்கள் செலுத்தப்பட்ட நாள்: 13.02.2024
16. நகர் ஊரமைப்பு ஆணையாளர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.4367/2019/TCP2, நாள்: 14.10.2019
17. ஊராட்சி தீர்மான எண்: 108 நாள்: 07.03.2024.

◇◇◇◇◇

சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட வடக்கு இளையாத்தங்குடி ஊராட்சி, அச்சரம்பட்டி கிராமத்தில் சர்வே எண் 194/2B-ல் 6240சமீ (1.545ஏக்கர்) பரப்பளவு கொண்ட 32 மனையிடத்திற்கு குடியிருப்பு மனைப்பிரிவு, பார்வை ஒன்று மற்றும் இரண்டில் காணும் அரசாணையின்படி நடவடிக்கை மேற்கொண்டு குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடம், பார்வை 2-ல் காணும் சிவகங்கை நகர் ஊரமைப்பு மண்டல துணை இயக்குநர் அவர்களின் 21.02.2024 தேதிய செயல்முறைகள் ROC/HHCJIJI6/2024/TCP என எண்ணிட்டு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் ஊராட்சிக்கு தானமாக வழங்கப்படவேண்டிய இடங்களை ஊராட்சியின் பெயருக்கு மாற்றி பார்வை 5 இல் கண்டுள்ளவாறு பத்திரபதிவு செய்து ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலும்

பார்வை 17 இல் கண்டுள்ள தீர்மானத்தின்படி உரிய கட்டணங்கள் வசூல் செய்து அனுமதி வழங்கிட தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், சிவகங்கை அவர்களின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு நில பயன்மாற்றக்கட்டணம் உரிய அரசு தலைப்பில் செலுத்தி அதற்குரிய செலுத்துச்சீட்டு பார்வை 15 இல் கண்டுள்ளவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆகவே பார்வை 2 இல் கண்டுள்ள நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், சிவகங்கை அவர்களின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள சிறப்பு நிபந்தனைகளுக்குட்பட்டும் இத்துடன் இணைப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டும் இம்மனைப்பிரிவிற்கு மனைப்பிரிவு அங்கீகார இறுதி ஒப்புதல் வழங்கி இதன் மூலம் அனுமதிக்கப்படுகிறது.

நிபந்தனைகள்:

1. சிவகங்கை நகர் ஊரமைப்பு மண்டல துணை இயக்குநர் அலுவலகத்தில் அனுமதி வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தில் உள்ளாட்சி அமைப்பு ஒப்புதலின்றி மாற்றம் செய்யக் கூடாது. தவறும் பட்சத்தில் முன்னறிவிப்புமின்றி ரத்து செய்யப்படும்.
2. நகர் ஊரமைப்புத்துறை கொள்கை அளவிலான ஒப்புதல் அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை, அதன் மேல் வேறு யாரேனும் தனிநபர் உரிமை கோரினால் இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறையோ உள்ளாட்சி துறையோ பொருத்தமான அமைப்பு அல்ல.
3. மனுதாரர் மனைப்பிரிவு தொடர்புடைய உள்ளாட்சியினை அணுகி இறுதி ஒப்புதல் பெற்றுக் கொள்ள வேண்டும். மனைப்பிரிவில் அமையும் மனையில் கட்டடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொரு கட்டடத்திற்கும் நகர் ஊரமைப்புத் துறை மற்றும் உள்ளாட்சியிடமிருந்து அனுமதி பெற வேண்டும்.

K. தத்து

ஊராட்சி மன்ற தலைவர்,
வடக்கு இளையாத்தங்குடி ஊராட்சி,
திருப்பத்தூர்.

பெறுநர்:

Selvi/Tmt P.Vallikkannu,
PKNR Trust, Pillaiyarpatti,
Siravayal, Thiruppathur
Sivagangai Dist-630207

நகல்:

1. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், சிவகங்கை அவர்களுக்கு தகவலுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
2. சார் பதிவாளர், திருப்பத்தூர். சிவகங்கை மாவட்டம்.
3. வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ),
   திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றிம்.
4. மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர்,(4)
   திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றிம்.